
தெல்லிப்பழை

மகாஜனக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்



சனிக்கிழமை

13.05.1989

மாலை 7.00

Convay Hall,

Red Lion Square,

London WC1.

களரி அரங்க இயக்கம்

தயாரித்து அளிக்கும்

மஹாகவியின்

# புதியதொரு வீடு

*With Compliments*

**SOLICITORS**

**ADMINISTRATORS OF OATHS**

425 HIGH STREET NORTH
MANOR PARK
LONDON E12 6TL

Tel: 01-472 5824 ( 5 Lines )
Fax: 01- 472 2931

**N. SKANDA KUMAR & COMPANY**

**NALAYINI SKANDA KUMAR**

*With Best Compliments*
*from*

# RAMA & COMPANY

INDEPENDENT FINANCIAL ADVISERS

*For all your life assurance, pension, mortgage, re-mortgage, savings, school fees, secured personal loans, overseas residents life assurance and general insurance needs.*

*Please contact me for independent financial advice and personal service.*

A FIMBRA MEMBER

*V.R. RAMANATHAN*
3 The Orchard,
Wickford, Essex, SS12 0HB.
Tel: (0268) 766624.
(24 Hour Answering).

INDEPENDENT FINANCIAL ADVISER

# *MAHAJANA COLLEGE*

# OLD STUDENTS ASSOCIATION

# (U.K)

## *தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி*
### *பழைய மாணவர் சங்கம்*

இனிய நண்பர்களே,

1910ம் ஆண்டு மகாஜனக் கல்லூரியை நிறுவிய பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை முதல் இன்றைய நாள் வரை நூற்றுக்கணக்கான படைப்பாளிகளை மகாஜனா, ஈழத்துக் கலை, இலக்கிய உலகிற்கு தந்துள்ளது. ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றின் மிக முக்கிய காலமாகிய ' மறுமலர்ச்சி ' காலத்தில் மகாஜனக்கல்லூரி ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்துக்கு ஈன்று பிறந்தவர்களாக ' மும்மணிகள் ' எனப்படுகின்ற அ.செ. முருகானந்தன், அ.ந.கந்தசாமி, மஹாகவி ஆகிய மூவரும் கருதப்படுகின்றனர்.

ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடி என்று அறியப்படுகின்ற மஹாகவி 1970 இறுதியில் ' புதியதொரு வீடு ' பாநாடகத்தை எழுதினார். 1971 மார்ச்சில் கொழும்பு பொரல்ல Y.M.C.A மண்டபத்தில் அ.தாசீசியஸின் நெறியாள் கையில் நாடோடிகளால் தயாரிக்கப்பட்டு முதற் தடவையாக இந்நாடகம் மேடையேற்றப் பட்டது. உடனடியாகவே மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, யாழ்ப்பாணம் முதலான பிரதேசங்களில் மேடையேற்றப்பட்ட புதியதொரு வீடு, மாத்தறையில் தனியே சிங்கள ரசிகர்களுக்காகவும் ஒரு முறை நிகழ்த்தப் பெற்றது.

ஹவா லே செயின்ட் கெனிங் கல்லூரி, யாழ்-நாடக அரங்கக் கல்லூரி, யாழ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் எல்.எம்.றேமன், சி.மௌனகுரு ஆகியோரின் நெறியாள்கையில் மீண்டும் தயாரிக்கப்பட்டது இந் நாடகம், இப்போது லண்டன் ' களரி ' அரங்க இயக்கத்தினால் தயாரிக்கப்பட்டு, இன்று இரண்டாவது தடவையாக மேடையேறுகிறது. இலங்கையின் தலை சிறந்த நாடக நெறியாளர் திரு.அ.தாசீசி-யஸின் நெறியாள்கையின் கீழ், தமிழ் மொழியின் வளர்ச்சியிலும், கலை, கலாச்-சாரத்துறையில் ஆர்வங்கொண்ட கலைஞர்களின் ஆக்கம் இது. அவர்களின் முயற்சிகள் வெற்றிபெற, உங்களின் ஆதரவு வேண்டும். எழுபதுகளில் காலம் சென்ற ஆசிரியர் செ.கதிரேசர்பிள்ளை எழுதி இயக்கிய ஐந்து நாடகங்கள், தொடர்ந்து ஐந்து ஆண்டு-கள் அகில இலங்கை நாடகப் போட்டிகளில் முதற்பரிசு பெற்றதை இவ்வேளையில் பழைய மாணவர்களாகிய நாம் நன்றியுடன் நினைவு கூர்வோம்.

மகாஜன பழைய மாணவர் சங்கத்தினராகிய நாம், இவ்வாண்டு தை மாதம் முதல் மகாஜனவில் கல்விகற்கும் ஐந்து மாணவர்களுக்கு, அவர்களின் கல்வி முடியும் வரை மாதாமாதம் ரூபா 200 வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளதையும், கல்லூரி அதிபர் திரு.நாகராஜாவினாலும், இதற்கென நியமிக்கப்பட்ட குழுவினராலும் 5 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இதனால் பயன் பெறத் தொடங்கியுள்ளதையும் பெரும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். இதற்கு நிதி திரட்டும் முகமாகவே நாம் இந் நாடகத்தை மேடையேற்றுகிறோம். எங்களது இம்முயற்சி தொடரவும், எமக்கு கல்வி தந்ததன் மூலம், வாழ்வு தந்த மகாஜன அன்னைக்கு உதவவும், அதன் மூலம் எம்மைப்போல எதிர்கால இளைய சமூகம் பயன் பெற்று புதுவாழ்வு பெறவும் உங்கள் அனைவரது ஒத்துழைப்பை அன்புடன் வேண்டுகிறோம்.

வணக்கம்.

மகாஜன பழைய மாணவர் சங்க (U.K.) கிளை.

13-05-1989



# மஹாகவி

எம். ஏ. நுஃமான்

'கேடுற்றவரிடையே கெட்டழியாது என்னிடமே எஞ்சிக் கிடக்கின்ற இன்கவி — இவ் என்பாக்கள் என்றைக் கொருநாளோ எத்திசையையும் வெல்லும்' என்று இளமைக் காலத்திலேயே தன்னை முன்னுணர்ந்து பாடியவர் மஹாகவி. அவரது சொந்தப் பெயர் து. ருத்திரமூர்த்தி. அவர் பிறந்தது 1927ம் வருடம் தை மாதம் 9ம் திகதி ஒரு ஞாயிற்றுக்கிழமை. அளவெட்டியில் ஒரு சராசரிக் குடும்பத்தில் அவர் பிறந்தார். தனது பதினேழாவது வயதில் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தார். உயர் கல்வி பெறமுடியாமையின் காரணமாக தனது பத்தொன்பதாம் வயதில் ஒரு கிளாக்காக கொழும்புக்கு வந்தார். 28ம் வயதில் திருமணம் செய்தார். ஐந்து பிள்ளைகளுக்குத் தகப்பன் ஆனார். 1967ல் இலங்கை நிர்வாகச் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து மாவட்டக் காணி அதிகாரியாக மன்னாருக்குச் சென்றார். அக்காலத்தில்தான் அவரை முதன்முதல் இதய நோய் தாக்கியது. அதனால் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு மாற்றம் பெற்றார். அங்கிருந்து மட்டக்களப்புக் கச்சேரியில் அலுவலக உதவியாளராக 69 நவம்பரில் கடமையேற்றார். 71 ஏப்ரல் மாதத்தில் அரசகரும மொழித்திணைக்களத்தில் உதவி ஆணையாளராக திரும்பவும் கொழும்புக்கு வந்தார். அவரது உத்தியோக வாழ்வின் தொடக்கமும் முடிவும் கொழும்பிலேயே ஆயிற்று. 71 ஜூன் 14ம் திகதி மீண்டும் அவரை இதய

நோய் தாக்கியது. ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் படுக்கையில் கிடந்தார். இறுதியில், உயர்பதவியில் இருந்த ஓர் ஏழை மனிதனாக 20ம் திகதி இரவு ஞாயிற்றுக்கிழமை அவர் உயிர் நீத்தார். சுவை நிரம்பிய நிகழ்வுகளினதும் மேதமை செறிந்த குணாம்சங்களினதும் உள்ளடக்கமாக இருந்த அவரது தனிப்பட்ட வாழ்வு அத்தோடு முடிவுற்றது.

## 2

மஹாகவி தனது பதினான்காவது வயதில் கவிதை எழுத ஆரம்பித்தார். முதலில் பண்டிதன் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதினார். அ. ந. கந்தசாமி, அ. செ. முருகானந்தம், வரதர் ஆகியோர் அக்காலத்தில் அவரது இலக்கிய நண்பர்களாக இருந்தனர். கந்தசாமி அப்போது கவீந்திரன் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதினார். அதைவிடச் சிறந்த ஒருபுனை பெயரைத் தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமே மஹாகவி என்ற புனைபெயரை அவர் துணிச்சலோடு சூடிக் கொள்ளக் காரணமாயிற்று.

தனது பதினாறும் பதினேழாம் வயதுகளில் அவர் எழுதிய கவிதைகளை வானகம், புரட்சி, கவிக்கன்னி, ஆரம் ஆகிய தலைப்புக்களில் நான்கு சிறிய கையெழுத்துக் கவிதை நூல்களாக அவர் தொகுத்துள்ளார். ஒவ்வொன்றையும் தனது இளமைக்கால இலக்கிய நண்பர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். அவற்றின் அட்டை அமைப்புக்களையும் அவரே செய்துள்ளார். ஒவ்வொன்றின் பின்புற அட்டையிலும் அரிவாளும் சுத்தியலும் அவர் கைப்படவே வரைந்திருக்கிறார். அரும்பும் காலத்திலேயே அவரிடம் தனித்துவமான கவிதைப் போக்குகள் அமைந்திருந்தன என்பதை அத்தொகுப்புகளில் இருந்து நாம் காணமுடியும்.

1943ல் இருந்து அவரது கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகத் தொடங்கின. கிராம ஊழியன், மறுமலர்ச்சி, ஈழகேசரி, ஆனந்தன் போன்ற பத்திரிகைகளில் அவரது ஆரம்ப காலக் கவிதைகள் பிரசுரமாயின. கிட்டத்தட்ட முப்பது வருடங்களாக அவர் தமிழ்க் கவிதையை வளப்படுத்தி வந்துள்ளார். நூற்றுக் கணக்கான கவிதைகளும், இசைப்பாடல்களும், காவியங்களும், நாடகங்களும் அவர் எழுதியுள்ளார். அவரது உத்தியோக உயர்ச்சியைப் போன்றே அவரது
கவிதைப் போக்கிலும் தேக்கமற்ற சீரான வளர்ச்சி நிலையைக் காண → 10
லாம்.

# NATHAN (K.P.) & CO
SOLICITORS

- Conveyancing
- Criminal & Road traffic cases
- Immigration
- Personal injury / accident claims
- Matrimonial
- Civil & general litigation
- Power of attorney, lastwill etc.

334B HOE STREET
WALTHAMSTOW
LONDON - E17 9PX
TEL: 01-~~902~~ 509 0695/0962

81 SOUTH ROAD
SOUTHALL
MIDDLESEX UB1 1SQ
TEL: 01-571 0928



***With The Best***
***Compliments***
***from***

**A. SRIHARAN**
**RENUKA SRIHARAN**
**R. P. CHATWANI**

The Solicitors of:

**CHATWANI & CO**
SOLICITORS
86A, HIGH STREET, SOUTHALL,
MIDDLESEX UB 3DB
Tel: 01-843 9974
Fax: 01-574 1766

களரி அரங்

தயாரித்த

மஹாக

# புதியதெ

பாநா

மேடைமீது ....

பாடகர்கள்:

ராஜீஎஸ். பிரிவே
சிசு நாகேந்திரா, ஜெனி சேவியர்
என். சிறிபாலமூர்த்தி, கே. ஸ்கந்தமூர்த்தி

மாயன்:
ஆர். ஜெயராஜா

மறைக்காடர்:
ஜொசி ஜெயேந்திரன்

மாசிலன்:
என். சிறிபாலன்

மன்னவன்:
குபேரா. சிவலிங்கம்

மயிலி:
ரஜனி

மையுண்ட நெடுங்கண்ணுத்தை:
பாலாம்பிகை. வீரவாகு

நெறியா

அ. தாசீ

க இயக்கம்
அளிக்கும்

# வியின்

# ாரு வீடு

_கம்

மேடையைச்சூழ....

அரங்க அமைப்பு:
ஜெரி சேவியர்

உடைகள்:
ரத்வேஸ் சேவியர்

ஒப்பனை:
கலிசியஸ்

ஒளி:
சிறீ அண்ணா

இசை:
ரமேஸ் எஸ். பிள்ளை

மிருதங்கம்:
எம். சிவராஜா

பொது நிர்வாகம்:
எஸ். ராமநாதன்

ள்ளை

சியஸ்

60ம் ஆண்டின் பின்னர் ஒரு பெரிய பரப்பில் வாழ்க்கையை நோக்கும்தன்மை அவரிடம் காணப்பட்டது சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கந்தப்ப சபதம், கண்மணியாள் காதை ஆகிய காவியங்களையும், கோடை, முற்றிற்று, புதியதொரு வீடு ஆகிய நாடகங்களையும் அறுபதின் பின்னரே அவர் படைத்தார்.

3

இன்னவைதாம் கவி எழுத
ஏற்ற பொருள் என்று, பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர்! சோலை, கடல்,
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள்! மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்

என்று இருபது வருடங்களுக்கு முன் மஹாகவி எழுதினர். 'நிகழ்காலச் செய்திகளையும், பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத்துவரல் அவசியமாகும்' என்று மிகச் சமீபத்திலும் அவர் எழுதினர்.

'இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத் தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத் திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்'

ஆகியவையே கவிதையில் இடம்பெற வேண்டும் என்று அவர் சொன்னர். 'கேட்டலுத்த சொற்றொடரில் கேட்டலுத்த செய்திகளைப் போட்டுக் கொடுத்தால் தான் போற்றுவார்' என்ற போதிலும் புதிய உள்ளடக்கத்தைப் புதிய பாணியில் அவர் கையாண்டார்.

'இலக்கியத்தினதும் கலைகளினதும் ஒரே ஊற்றுக் கண்ணுன மனிதனது சமுதாய வாழ்வே' மஹாகவியின் படைப்புக்களின் உள்ளடக்கமாகவும் உள்ளது. அவரது ஆரம்ப காலப் படைப்புகளில் சில புறநடைகள் உண்டெனினும் அவரது அடிப்படை இதுவே, நடப்பியல் வாழ்வில் இருந்து புறம் போக்காக ஒதுங்கிச் சென்று கற்பனை உலகில் அவர் சஞ்சாரம் செய்யவில்லை. பதிலாக நடப்பியல் வாழ்வில் இருந்தே அவர் தன் படைப்புகளுக்கான கருப்பொருட்களைப் பெற்றுர். தான் கண்டு அனுபவித்த வாழ்க்கையை அதன் முரண்பாடுகளை அவர் பிரதிபலித்தார்.

இந்தப் பிரதிபலிப்பின் அடிப்படை விதிவாதமோ வேறு சனாதனத்தத்துவக் கோட்பாடுகளோ அல்ல. பழைய மரபுகளுள் உழன்று கொண்டிருக்கும் பண்டிதத்தனம் அவரிடம் இருக்கவில்லை. உழுத்துப் போன பழைய தத்துவங்களுக்கும் சமூக அமைப்பு முறைகளுக்கும் வக்காலத்து வாங்கும் ஒரு பிற்போக்கு வாதியாக அவர் என்றும் இருந்ததில்லை, கடவுள் நம்பிக்கை அற்றவராக இருந்ததோடு சமய ரீதியான சடங்கு சம்பிரதாயங்களையும் அவர் பொருட்படுத்தியதில்லை. மட்கி உதிர்ந்து கொண்டிருக்கும் சாதியமைப்பை அவர் மதித்ததில்லை. வாழ்க்கையில் இருந்து தப்பிச் செல்வதோ தயங்கி அழுவதோ அவரது குணம்சம் அல்ல. மனித வல்லமையின் மீதும் மனித வாழ்க்கையின் மீதும் ஓர் ஆழமான பற்றுதலையும் உறுதியான நம்பிக்கையினையுமே அவர் தன் படைப்புகளில் வெளிப்படுத்தினார்.

## 4

இலக்கியம் அதன் உள்ளடக்கத்தினால் மட்டும் சிறப்புப் பெறுவதில்லை. உள்ளடக்கத்தின் பரிவர்த்தனைமுறை – அதன் கலையாக்கநெறி இலக்கியத்தின் தலையாய அம்சங்களுள் பிரதானமானதாகும். மஹாகவி கையாண்ட கலையாக்க நெறியே, இந்த நூற்றாண்டின் பிற தமிழ்க் கவிஞர்கள் அனைவரிலும் இருந்து அவரை வேறுபிரித்துக் காட்டும் முதன்மையான அம்சம் எனலாம்.

பாரதியும், பாரதி வழிவந்தவர்களில் சிறந்தவர்கள் என்று போற்றப்படுபவர்களும் பிரதானமாகக் கருத்துக்களையே முதன்மைப் படுத்தினார்கள். அதனால் அவர்களது கலையாக்க நெறி செய்யுளின் ஓசை அடைவையும், சொல்லாட்சித் திறமையையும் கருத்து விளக்கத் துக்குப் பயன்படுத்தப்படும் உவமைபோன்ற அலங்காரச் சிறப்புக்களையும் அடிப்படையாகக் கொண்ட 'செவிப்புலக் கலையாக்க' மாகவே உள்ளது. செய்யுள் ஆற்றலும் கருத்து வளமும் உடைய ஒருவனின் மூலம் இக் கலை நெறி தனக்குரிய சிறப்பைப் பெறவே செய்கின்றது. ஆனால் தமிழ் நாட்டில் அத்தகைய ஆற்றல் உடையவன் யாரும் இன்மையால் தற்காலச் செய்யுள்வழிக்கவிதை வரண்ட பாலையாயிற்று. அதன் எதிர்வினையாகத் தோன்றிய பிச்சமூர்த்தி வழிவந்த வசன கவிஞர் களும் கருத்துக்களையே முதன்மைப்படுத்தி ஓசைக்குப் பதிலாக குறியீட் டுப் படிமக் கலைமுறை ஒன்றை வளர்த்தார்கள். பிச்சமூர்த்தி போன்ற மிகச் சிலர் அதில் ஓரளவு வெற்றி கண்ட போதிலும் பெரும்பாலும் அவர்களது படைப்புக்கள் புதிர்களாகவும் நொடிகளாகவும் வளர்ச்சி யுற்று நவீன நாயக்கர் காலம் ஒன்றைத் தோற்றுவித்துள்ளன.

ஆனால் மஹாகவி கருத்துக்களை முதன்மைப் படுத்தாது கருத்துக்களின் வெற்றுக் கண்ணாக இருக்கும் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை முதன்மைப் படுத்தினார். நிகழ்வுகளை அதனை உயிர்த்தன்மையுடன் அவர் சொற்களில் சித்திரித்தார். அதனால் அவரது கலைநெறி காலம், களம், நிகழ்வு ஆகியவற்றின் ஒருங்கிணைவைப் பெற்ற 'கட்புலக் கலைநெறி'யாக உள்ளது. இக்கலை நெறி சங்ககாலக் கவிதைகளுக்குப் பின்னர் மஹாகவியிடமே தற்காலத்துக்கு ஏற்றவகையில் முழுவடிவம் பெற்றுள்ளது எனலாம்.

இந்த நூற்றாண்டின் தமிழ்க் கவிதையில் இக்கட்புலக் கலைநெறியைத் தோற்றுவித்து அதனை ஓர் எல்லைவரை வளர்த்தெடுத்த தனிப் பெருமை மஹாகவிக்கேயுரியது. இக்கலைநெறி தற்காலத் தமிழ்க் கவிதைக்கு மஹாகவியின் பிரதான பங்களிப்புகளுள் முக்கியமான ஒன்று ஆகும்.

மஹாகவியின் இப்படைப்பு நெறியின் உடன் விளைவே அவரது மொழி நடை எனலாம். இன்றைய பேச்சு மொழிக்கு மிகக் கிட்டிய ஒரு நடையை மஹாகவி கையாண்டார். கிராமிய மனிதர்களையும் கிராமிய நிகழ்வுகளையும் பெரிதும் அவர் கவிதையில் கொண்டுவர முயன்றதால் வேறு எங்கும் காணாத அளவுக்கு கிராமியப் பேச்சுவழக்குச் சொற்களை அவர் செய்யுளில் கையாண்டார். அவரது செய்யுள் நடை தற்காலத்துக்கு உரிய நவீனத் தன்மையைப் பெற்று மிக எளிமையாக இருக்கும் அதே சமயத்தில் மிக இறுக்கமாகவும் இயல்பாகவும் உள்ளது. திட்பமும் நுட்பமும் செறிந்த இலகுவான அவரது மொழி நடை மிகச் சிறந்த மொழியாற்றலின் பேறு ஆகும்.

## 5

ஆனால் துரதிஷ்ட வசமாக பலரால் மஹாகவி இன்னும் சரியாகக் கண்டறியப்படவில்லை. அவரது படைப்புகள் நூலுருப்பெறாமை அதற்குரிய முக்கிய காரணியாகும். இதுவரை அவரது நான்கு நூல்களே வெளிவந்துள்ளன. இன்னும் பதினைந்துக்கு அதிகமான நூல்கள் பிரசுரமாக வேண்டியுள்ளன. பத்திரிகை நறுக்குகளாக இருப்பவைதவிர இன்னும் பிரசுரிக்கப்படாமல் கையெழுத்துப் பிரதிகளாகவும் சில படைப்புகள் உள்ளன.

அவ்வளவையும் ஒருமித்து நோக்கி தமிழ்க்கவிதை வரலாற்றுடன் இணைத்துப் பார்க்கும்போதே தற்காலத் தமிழ்க்கவிதையில் மஹாகவி எத்தகைய பெரிய சக்தியாக இருந்தார் என்பதைக் கண்டு கொள்ள முடியும். மஹாகவி தனது காலத்தில் பிறர் யாருடனும் ஒப்புமை காணமுடியாத, தனித்துவம் வாய்ந்த படைப்பாளி என்பதையும் இந்த நூற்றாண்டின் தமிழ்க்கவிதை வரலாற்றில் அவர் ஒரு சகாப்தம் என்பதையும் அக்காரணத்தினால் அவரே தற்காலத் தமிழின் தனிப் பெருங் கவிஞர் என்பதையும் அப்போதே நாம் கண்டுகொள்ள முடியும்.

# ஆதரவு தந்த அனைவருக்கும் எமது நன்றிகள்!


71932

## Rathbone Holidays Limited

**GENERAL & BUSINESS TRAVEL**

**55 RATHBONE PLACE, LONDON W1P 1AB ENGLAND**

**We are Main Agents for Air Lanka, UTA, Korean Air, Royal Jordanian Airline**

**SUMMER 1989 FARES (Except July and August)**

**Some of our best fares**

| | |
|---|---|
| | **Return** |
| ★ LONDON – COLOMBO – SINGAPORE – SYDNEY – COLOMBO – LONDON | £850 |
| ★ LONDON – COLOMBO – HONG KONG – SYDNEY – COLOMBO – LONDON | £870 |
| ★ LONDON – COLOMBO – KUALALUMPUR – MADRAS – LONDON | £510 |

| | | |
|---|---|---|
| ★★ LONDON – COLOMBO – LONDON | | £399 |
| ★★ LONDON – MADRAS – LONDON | Direct | £460 |
| ★★ LONDON – COLOMBO – MADRAS – COLOMBO – LONDON | | £470 |
| ★★ LONDON – SINGAPORE – COLOMBO – LONDON | | £490 |

***AND MAY MORE SPECIAL FARES AVAILABLE FROM US***

**FOR PROMPT ATTENTION**
**PLEASE CALL US ON**
**01 580 4460**
***NOW!***

We accept all major credit cards – Visa Barclaycard Access American Express

**WE ARE NOW OPEN SATURDAY BETWEEN 10.00 HOURS to 13.00 HOURS**

# GAYA VIDEO

**30 Loampit Hill**
**Lewisham**
**London SE 13**

**Tel: 01-691 9981**

**Indo-Sri Lankan Foods**
**Newspapers and Magazines**

**Tamil Video**
**and Audio Cassettes**

**Courteous service • Attractive prices**

# A.G.ENTERPRISES

---

**150 High Street, Penge, London SE20**

# Feeling Homesick?

Verandah
A TASTE OF PARADISE

Then come and try our food prepared in authentic Sri Lankan style

Our specialities include Pittu, Idiappam, Fried Mutton in gingerly oil,
Vadai and Jaffna style fish, Fresh Crab, Mutton, Chicken and squid curry.
Also speciality Vegetarian dishes.
Fully licensed Bar with Lounge
Palmyrah Arrack, Lion Lager and Nelli Crush available.

New!

Eat as much as you like Sunday Lunch Buffet style at only £5.95 per head
Open daily 12 noon - 3 pm; 6.00 - 11.30 pm
Telephone for reservations

**01-659 1185**

FIMBRA MEMBER

# P. SRINIVASAN

INSURANCE, MORTGAGE & PENSION SPECIALIST

INDEPENDENT FINANCIAL ADVISER

'Suhantham'
Abbots Lane
Kenley
Surrey CR2 5JB
01-660 5692

1524 London Road
London SW16 4EU
01-679 1952/3

*INDEPENDENT FINANCIAL ADVICE*

## SERVICES

Life Assurance

Permanent Health Insurance

Medical Insurance

Mortgages and Finance

School Fees and College Education Planning

Expatriate Planning and Financial Services

Estate Planning

Investment Planning and Portfolio Management

Unit Trusts

Investment Bonds

Annuities

Income and Growth Bonds

Building Society Deposits

Directors' Pensions

Self-employed Pensions

Business Insurances

Employee Benefit Planning

Group Pensions

Commercial Mortgages

Life assurance and pension plans are generally long term investments and there may be financial penalties for ending a contract prematurely. The price of units can go down as well as up and future investment performance may not resemble the past.

BUSINESS FINANCE — PERSONAL PLANNING — HOUSE — LIFE — MOTOR — SHOP — GENERAL

# கல்லூரிக் கீதம்

(ஜன கண மன .......... என்ற மெட்டு)

ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
**துரையப்** பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனும் மகாஜன சிற்பி
**ஜயரத் தினம்**பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனை நீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா.

— புலவர் நா. சிவபாதசுந்தரனார்